# தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்

## முனைவர்ப் பட்ட TURCET 2024 இணைய விண்ணப்பத்தை நிறைவு செய்தல்

**விண்ணப்பத்தை இணையவழி நிறைவு செய்வதற்கான வழிமுறைகள்**

- தமிழ்ப் பல்கலைக்கழகச் சேர்க்கைக்கான இணையவழி விண்ணப்பத்தை நிறைவு செய்யும் முன்னர், கீழ்க்காணும் வழிமுறைகளைப் படிக்கவும்.
- விண்ணப்பத்தை நிறைவு செய்யும் முன்னர் உரிய கட்டணத்தை, தமிழ்ப் பல்கலைக்கழக இணையத்தின் (www.tamiluniversity.ac.in) வழியாக கீழ்க்காணும் வழிமுறைகளின்படி செலுத்தி அதற்கான இரசீதை PDF-ஆக சேமித்து வைத்துக்கொள்ளவும்.

(1) மேற்கண்ட இணைப்பைச் சொடுக்கி "online payment" என்பதை Click செய்து, Educational Instutions-ஐ Click செய்யவும்.

(2) பின்னர் Tamil Nadu-ஐ தேர்வு செய்து, அதில் Tamil university-ஐ தேர்வு செய்யவும்,

(3) SBI-யின் பணம் செலுத்தும் பக்கத்திற்குச் சென்ற பின்னர் **Select Payment Categoryல் CAMPUS EDUCATION APPLICATION FEE** என்ற பிரிவின்கீழ் தாங்கள் படிக்க விரும்பும் பாடத்தைத் தேர்ந்தெடுத்தும் (எ.கா.) **முனைவர் பட்டப் பாடப்பிரிவைத் தேர்ந்தெடுக்கவும்(Ph.D)** பிற தரவுகளை நிரப்பியும் பணத்தைச் செலுத்தவும்.

(4) அதற்கான இரசீதைப் பதிவிறக்கம் செய்து வைத்துக்கொள்ளவும்.

- இணையவழி விண்ணப்பத்தை நிரப்பும் முன்னர் தேவையான அனைத்து சான்றிதழ்களையும் மின்வருடி (Scan) செய்து PDF கோப்புகளாகச் சேமித்து வைத்துக்கொள்ளவும்.

- இணையவழி விண்ணப்பத்தை www.tamiluniversity.ac.in / Phdadmission -இல் சென்று முழுமையாக நிறைவு செய்யவும்.
- இணையவழி விண்ணப்பத்தில் கேட்கும் இடங்களில் கட்டணம் செலுத்தியதற்கான மின் நகலை PDF-ஆகப் பதிவேற்றம் செய்யவும்.
- விண்ணப்பத்தை நிரப்பிய பின்னர் சரிபார்த்து (Submit-ஐ Click செய்து) பதிவேற்றவும்.
- பதிவேற்றம் செய்த இறுதி விண்ணப்பத்தின் நகலை சேமித்து வைத்துக்கொள்ளவும்.

முனைவர்பட்ட நுழைவுத் தேர்வு எழுத விரும்பும் மாணவர்கள் தங்களது விண்ணப்பத்தில் கைபேசி எண் மற்றும் மின்னஞ்சல் முகவரி உட்பட அனைத்து விவரங்களையும் முழுமையாக நிறைவு செய்து அவ்விண்ணப்பத்தை இறுதி நாளுக்கு முன்பாக இணையவழியாக அளிக்க வேண்டும். இணையவழியாக விண்ணப்பித்த 5 நாட்களுக்குள் அஞ்சல் வழியாக விண்ணப்பத்தை கல்வித்தகுதிச் சான்றிதழ், சாதிச் சான்றிதழ், மாற்றுச் சான்றிதழ் மற்றும் பிற சான்றிதழ்கள் நகலைச் சொந்தக் கையொப்பம் இட்டு இணைத்து **தேர்வுக்கட்டுப்பாட்டு அலுவலர், வளாகக்கல்வித் தேர்வுப்பிரிவு , தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர் 613010** என்ற முகவரிக்கு அனுப்பி வைக்க வேண்டும். எக்காரணம் கொண்டும் அசல் சான்றிதழ்களை விண்ணப்பத்துடன் இணைத்தல் கூடாது.

விண்ணப்பக் கட்டணங்கள் தவறுதலாக வேறு கணக்கில் செலுத்தப்பட்டாலோ, இரண்டு முறை செலுத்தினாலோ தொகை மீள வழங்கப்பட மாட்டாது.

தேர்வுக்கட்டுப்பாட்டு அலுவலர்(பொ)